மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 20ம் நாள் சனிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோமதி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>20.09.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்துக்கள் வீட்டு இடமாக கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வீட்டு மனையாக பிரிக்கப்பட்டு கிரயம் வாங்கினேனா தனியாக கிரயம் வாங்கினேன் என்றால் குமரன் நகர் என்று வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்ததில் நான் கிரயம் பெற்றேன். விவசாய பூமியை வீட்டு மனைகளாக பிரிப்பதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற்றார்கள் என்பதற்கான ஆவணம் எதையேனும் நான் பார்வையிட்டேனா என்றால் பஞ்சாயத்தில் அனுமதி கொடுத்திருந்தார்கள் அதனால் நான் கிரயம் பெற்றேன். பஞ்சாயத்தில் அனுமதி பெற்றதற்கான ஆவணம் எதையேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. தாவா சொத்தில் நான் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு தான் நான் வீடு கட்டினேன் என்றால் ஆமாம். எனது வீடு வடக்கு பார்த்த வீடு என்றால் இல்லை மேற்கு பார்த்த வீடு எனது வீடு வடக்கு பார்த்த வீடு என நீதிமன்ற ஆணையர் அதை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை எனது வீடு மேற்கு பார்த்த வீடு தான். நீதிமன்ற ஆணையர் எனது வீடு வடக்கு பார்த்து உள்ளது என தாக்கல் செய்த அறிக்கைக்கு நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்ட சமயம் நான் இருந்தேனா என்றால் இருந்தேன் ஆனால் இரு தரப்பு வழக்கறிஞர்களும் பேசிக்கொண்டு சென்று விட்டார்கள் வேறு எதுவும் எனக்கு தெரியாது.

3. அதன்பிறகாவது நீதிமன்றத்தில் இருந்து நகல் பெற்று நீதிமன்ற ஆணையர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை பொறுத்து நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். அதன் பிறகும் நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எவ்வித ஆட்சேபனையும் எழுதி போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் 20 அடி கிழமேல் தடத்திற்கு தெற்கு என கண்டு செக்குபந்தி கண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

4. அந்த 20 அடி அகல தடத்தில் நிலத்திற்கு கீழே பைப் லைன் அமைத்து பிரதிவாதிகள் தண்ணீர் கொண்டு செல்கிறார்கள் என்றால் இல்லை. அந்த தடத்தை பறித்துப் போட்டு நான் அனுபவம் செய்வதை

இடையூறு செய்கிறார்கள். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் மேற்படி 20 அடி அகல தளத்தில் நிலத்திற்கு கீழே பைப் லைன் அமைத்து பிரதிவாதிகள் தண்ணீர் கொண்டு செல்வதாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை பறித்து மட்டும் தான் போட்டு உள்ளார்கள். பைப் லைன் எதுவும் போடவில்லை எனக்கு எப்படி தான் இடையூறும் இல்லாமல் பிரதிவாதிகள் மேற்படி 20 அடி அகல தடத்தின் அடியில் குழி பறித்து பைப்லைன் அமைத்துதங்களுடைய விவசாய பூமிகளுக்கு நீர் கொண்டு செல்கிறார்கள் என்றால் பைப் லைன் எதுவும் அமைக்கவில்லை தடத்தில் குழி பறித்து போட்டு என்னை நடக்க விடாமல் இடையூறு செய்து வருகிறார்கள்.

5. எனது பூமியின் ரீ சர்வே எண்.5/1 என்றால் ஆமாம். எனது பூமியை ஒட்டி வடபுறம் ரீ சர்வே எண்.1 அமைந்துள்ளது என்றால் அது எனக்கு தெரியாது அந்த பூமியின் மேற்கு கோட்டில் பி ஏ பி வாய்க்கால் மதகு அமைந்துள்ளதா என்றால் ஆமாம். ஆனால் அது கிழக்கே செல்வதற்கு உண்டானது. அந்த மதகிலிருந்து தெற்கே வாய்க்கால் மூலமாக தண்ணீர் வருவதற்கு அந்த மதகிலேயே அமைப்பு உள்ளது என்றால் அவ்வாறு அமைப்பு எதுவும் இல்லை மதகை உடைத்து விட்டு தண்ணீர் எடுத்து எனது வீட்டிற்கு முன்னால் உள்ளே எல்லாம் தண்ணியை வெட்டி விட்டு என்னை தொல்லைசெய்கிறார்கள்.

6. பிரதிவாதிகள் மதகை உடைத்து எனது வீட்டிற்கு முன்னால் பைப்லைன் அமைத்து என்னை தொல்லை செய்வதாக எனது வழக்குரையில் நான் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரிதான்.

அந்த மதகிற்கு அதன் வடபுறம் அமைந்துள்ள மெயின் பி ஏ பி வாய்க்காலில் இருந்து தண்ணீர் வருகிறது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பூமிக்கு வடபுறம் மேற்கோட்டில் அமைந்துள்ள பூமிக்கு அடியில் குழாய் பதித்து தாவா சொத்திற்கு மேல் புறமாக தெற்கே சென்று பிரதிவாதிகள் பூமிக்கு தென்புறமாக உள்ள மதகில் தண்ணீர் மேலே வரும்படி அமைப்பு உள்ளது என்றால் அவர்களாக அந்த அமைப்பை ஏற்படுத்தி உள்ளார்கள்.

7. பிரதிவாதிகள் பூமிக்கு தென்புறமாக உள்ள நிலத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கிணறு உள்ளது என்றால் ஆமாம். அந்த கிணறும் தொட்டியும் மேற்படி பூமியின் மேற்கோட்டில் அமைந்துள்ள அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து பூமிகளின் மேற்கோரமாக தென்வடல் வாய்க்கால் அமைத்து பிரதிவாதிகள் மற்றும் அதற்கு வடபுறம் உள்ள என்னுடைய சொத்து உள்ள பூமிகளுக்கும் கிணற்று தண்ணீர் பாசனம் செய்து கொள்ள வா.சாஆ.1 மற்றும் வா.சாஆ.2 ஆன 1974 பாகசுராார் ஆவணத்திலேயே பிரதிவாதிகளுக்கு உரிமை கண்டுள்ளது என்றால் சரியல்ல.

8. கிணறு அமைந்துள்ள பாகம் பள்ளத்தில் அமைந்துள்ளது எனது பூமி மேட்டில் அமைந்துள்ளது கிணற்றிலிருந்து வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாய்ச்ச இயலாது அதுபோல் வாய்க்கால் எதுவும் நிலையில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு எதிராகவே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல பிரதிவாதிகள்

பூமிக்கும் பிரதிவாதிகள் பூமியின் வடபுறம் உள்ள பூமிகளுக்கும் மேற்படிக் கிணற்றிலிருந்து தான் வாய்க்கால் மூலமாக பாசனம் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் வாய்க்கால் எதுவும் இல்லை.

9. மேற்படி பத்திரத்திலேயே கிணற்றிலிருந்து அவரவர் பாகத்திற்கு வாய்க்கால் அடியிலேயே பைப்லைன் அமைத்து தண்ணீர் கொண்டு செல்ல உரிமை கண்டுள்ளது என்றால் சரியல்ல. கிணற்றை சுற்றியுள்ள நிலங்களுக்கு மட்டும் தான் அதிலிருந்து நீர் பாயும் வடக்கே மேடு என்பதால் அதிலிருந்து வடக்கே தண்ணீர் வராது மேற்படி கிணற்றிலிருந்து எனது முன் பாத்தியஸ்தர்களும், பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர்களும் எவ்வாறு தங்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சினார்கள் என்றால் நீர் எதுவும் பாய்ச்சவில்லை எனது பூமிகள் ஆடு மாடுகள் மேய்ந்து கொண்டிருந்த காடாக இருந்தது. பிரதிவாதிகள் பூமியில் தென்னை மர தோப்பு அமைந்துள்ளது என்றால் சரிதான்.

10. அந்த தென்னை மரங்கள் வயது 30, 40 வருடங்கள் இருக்கும் என்றால் இல்லை. நான் வந்து எனது பூமியில் வீடு கட்டியதற்கு பின்பு தான் மரங்கள் வைத்தார்கள் தென்னை மட்டைகள் விழுந்து என் வீட்டின் ஓடுகள் உடைந்து எனக்கு தொல்லையாக உள்ளது. தென்னை மரங்கள் சிறியதாக உள்ளதை குறித்தும், மட்டைகள் விழுந்து என் வீட்டின் ஓடுகள் உடைந்தது குறித்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்ட சமயத்தில் நான் காட்டினேனா என்றால் இல்லை. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில்

புகார் கொடுத்து மனு ரசீது வாங்கி வைத்துள்ளேன். எனது பூமிக்கு வடபுறம் உள்ள பிஏபி வாய்க்கால் மதகிலிருந்து தெற்கே வரும் வாய்க்காலின் குறுக்கே தென்னை மட்டைகளை போட்டு நான் தான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

11. அவ்வாறு வாய்க்கால் எதுவும் இல்லைநீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தெற்கே வரும் வாய்க்காலின் குறுக்கே நான் தென்னை மட்டைகளை போட்டு வைத்திருந்ததையும் வாழை மரங்கள் நட்டு வைத்திருந்ததையும் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தை நான் தான் இவ்வளவு நாட்களாக பயன்படுத்தி வந்தேன் அது எனது சொத்து அதை மேற்கு புற வாசலாக வைத்து நான் மளிகை கடை நடத்தி வருகிறேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துகளை பார்வையிட்ட சமயத்தில் எனது வீட்டிற்கு மேற்கு புற வாசல் உள்ளதை குறித்து நான் அழைத்துச் சென்று காட்டினேனா என்றால் ஆணையர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை அதனால் நான் காண்பிக்கவில்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் முதன்முதலாக மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று தாவா சொத்துக்களை காட்டினேனா என்றால் ஆமாம்.

12. அந்த அறிக்கையிலும் நீதிமன்ற ஆணையர் எனது வீடு வடக்கு பார்த்து உள்ளதாக தான் சொல்லி உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது வீட்டின் மேல் புறம் மண் பகுதியாக இருந்ததாக சொல்லி உள்ளார் என்றால்

மண் இருந்தால் தான் அதில் நடக்க முடியும். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்திருந்த முதல் அறிக்கையிலும் எனது வீட்டிற்கு மேல் புறம் வாசல் இருந்ததாகவும் அதில் எனது வீட்டில் இருந்து சென்று வர வழித்தடம் இருந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கும் நான் ஆட்சேபனைகள் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

13. எனது வீட்டிற்கு மேல் புறத்தில் எந்த வாசலும், கதவும் கிடையாது என்றும், வடபுறத்தில் உள்ள 20 அடி அகல தடத்திற்கு செல்லும் படி வடபுறத்தில் மட்டும்தான் வாசல் அமைந்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரமானது எனது ஆவணங்களுக்கு எதிராக எனது வீட்டின் முன் வாசல் மேல் புறத்தில் அமைந்துள்ளதாக கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பூமி மற்றும் பிரதிவாதிகள் பூமியை ஒட்டி தென்வடலாக தார் ரோடு செல்கிறது என்றால் ஆமாம். மேற்படி தென்வடல் தார் ரோட்டு பகுதிக்கு கிழபுரமாகவும் எனது தாவா சொத்து அமைந்துள்ள பூமியின் மேற்குப் கோட்டியிலும்பிரதிவாதிகளுக்கு ஆதியில் இருந்து வாய்க்கால் மூலமாகதண்ணீர் கொண்டு சென்று பாய்ச்சிக்கொள்ள பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.

14. அந்த வாய்க்கால் மூலமாக பிரதிவாதிகள் பிஏபி வாய்க்காலில் இருந்து நீர் பாய்ச்சி கொள்கிறார்கள் என்றும் அதை இடையூறு செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள எந்த ஒரு ஆவணத்திலும் பிரதிவாதிகள் பூமி பிஏபி வாய்க்கால் ஆயகட்டிற்கு சேராத பூமி என்று குறிப்பிட்ட எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பூமிக்கு தண்ணீர் கொண்டு செல்வதை வேண்டும் என்று இடையூறு செய்யும் நோக்கத்தில் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

15. எனது பூமிகோ நான் சென்று வருவதற்கோ எவ்வித இடையூறும் செய்யாமல் பிரதிவாதி நிலத்திற்கு அடியில் பைப்லைன் அமைத்து தான் நீர் பாய்ச்சி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.20 18:59:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்